முருகப்பெருமான் துணை

**மகான் கடுவெளிச்சித்தர் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**02.01.2024**, செவ்வாய்கிழமை

1. அறமாக வாழுகின்ற ஞானியே
   அண்ணலே அரங்கமகா தவசியே
   வரம் தந்துஉன் கொள்கை போற்றி
   வழங்குவேன் துல்லிய ஆசி
2. ஆசிதனை கடுவெளிச்சித்தரும்
   அருளுவேன் சோபகிருது சிலைதிங்கள்
   வசமுற மூவையீர் திகதி குசன் வாரம்
   (சோபகிருது வருடம் மார்கழி மாதம் 17 ம் நாள், 02.01.2024, செவ்வாய்கிழமை)
   வையகம் வளம்பெற உரைப்பேன்
3. உரைக்கவே உண்மைநெறிபட
   உத்தமர்களாக மக்களெல்லாம்
   குறைவின்றி சிறப்பு நிலை பெற
   குவலயத்தில் தருமவழி வந்து
4. வந்துமே அன்னதான சேவை
   வழிமொழிந்து கிளைகள் துவக்கி
   சந்தோஷமாக தருமம் செய்திட
   சகலருக்கும் அமுதின்வழி ஆற்றல்
5. ஆற்றல் அதீத சக்தியாகியே
   அனைவருக்கும் தரும ஞானபலம்
   மாற்றமாக வந்து கலந்துமே
   மண்ணுலகிலே ஞான ஆட்சிக்கு
6. ஆட்சிக்கு உண்டான சேவை
   அளவிலா பெருகிநன்கு
   ஆட்சி மாற்றம் நடந்தேறும்
   அகிலத்தில் ஞான ஆட்சி மலரும்

7. மலருகின்ற காலம் தொட்டு
மக்களை வதை செய்வது
வளராது தடைகள் கண்டு
வையகத்தில் அதிகாரம் ஆளுமையென
8. என அனைவரும் மாற்றம்
இணையில்லா முருகப்பெருமான்
ஞானம் அருளால் கண்டுமே
நல்நிலை முழுமைதனை அடைவர்
9. அடையவே ஆபத்து அபகரிப்பு
ஆர்ப்பாட்டம் அநீதி இல்லா
தடையற சமூக பாதுகாப்பும்
தனிப்பெருஞ் சக்திகளாக மாறி
10. மாறியே உலக மாற்றமதும்
மகான் அரங்கன் அவதார
கூறிடுவேன் நோக்கமாகி உலகில்
குறையிலா நிறைவேறும் இனிதே
11. இனிதே ஞான சபையாக
எவரும் குறை கண்டிடாத
கனிவேலவன் தலைமை ஏற்ற
கருணை நிறைந்த காலமாகமாறும்

துல்லிய ஆசி முற்றே

–சுபம்–